டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் அரூர் வட்டத்தில் இருக்கிற இந்த தீர்த்தமலை கோயிலின் தீர்த்தம் உண்மையிலேயே சர்வரோகத்தைப் போக்கக் கூடிய ஒன்றாகும். வரலாறு ரீதியாக மட்டும் அல்லாது விஞ்ஞான ரீதியாகவும் அது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல தீப்பத்துறை என்ற கிராமத்திலே இருக்கிற ஒரு பாறை மீது எண்ணெய் விட்டால், அது கசப்பாகி பாம்பு கடிக்கு மிகச் சிறந்த வைத்தியமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட அத்தியாவசியமான ஊர்களை நல்ல முறையில் விளம்பரப்படுத்தி, அங்கே எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து, யாத்ரீகர்கள் வர, போக்குவரத்து வசதிகள், ஒட்டல்கள், தங்கும் விடுதிகள் போன்ற அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து பொது மக்களுக்கு உதவிகரமாக ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பணிக் குழு மூலமும், அறங்காவல் துறை மூலமும் விளம்பரங்கள் செய்யலாம்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவையின் தலைநாயகர் அவர்களே, புராதனமான திருக்கோயில்களை எல்லாம் திருப்பணி செய்ய வேண்டும் என்று அரசு முன் வந்திருக்கிறதா? இது வரையில் எத்தனை கோவில்களுக்கு திருப்பணி செய்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாக வினாவைப் போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

போளூர் தொகுதி அமிர்தி சுற்றுலா மிருகக் காட்சி சாலை.

162—(*வினா எண். 9581) திரு. ஜெ. ராஜாபாபு : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதியிலுள்ள அமிர்தி காட்டிலுள்ள சுற்றுலா மிருகக் காட்சி சாலையை அபிவிருத்தி செய்யும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : ஆண்டு தோறும் இயற்கைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப் படும் நிதியைக் கொண்டு அமிர்தி மிருகக் காட்சிச் சாலை

[986 நவம்பர் 24]

சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இம் மிருகக் காட்சிச் சாலையின் மேம்பாட்டுப் பணிகளுக்கு என 1985–86 ஆம் ஆண்டில் ரூ. 2,07,000-மும் 1986–87 ஆம் ஆண்டில் வனவிலங்குகளின் மேம்பாட்டிற்காக ரூ. 4,00,000 மும் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. ஜெ. ராஜாபாபு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் தொகுதியில் உள்ள அமிர்தி பகுதியில் உள்ள வனப்பகுதிகளையும் மிருகக் காட்சி சாலையையும் பார்க்க ஏராளமான மக்கள் நாள்தோறும் வருகிறார்கள். அவர்களுக்கு அங்கே எந்தவிதமான வசதியும் கிடையாது. அந்தப் பகுதியிலே தங்கும் விடுதி கட்டி எல்லா வசதிகளை யும் செய்து கொடுப்பதோடு, அதை சுற்றுலா மையமான பகுதியாக அறிவிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதிக்கு வருகிற பயணிகளுடைய வசதிகளை கவனிப்பதற்கான நடவடிக்கையை துறை நிச்சய மாக எடுக்கும்.

திரு. ஜெ. ராஜாபாபு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமிர்தி பகுதியில் அதிகமான சந்தன மரங்கள் இருக்கிற காரணத்தால் அங்கு அந்தப் பகுதியில் சந்தன எண்ணெய் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர் களே, ஏற்கனவே சந்தன எண்ணெய் எடுப்பதற்கு தனியாக ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு போது மான சந்தன மரங்கள் கிடைக்கவில்லை. இப்படி மரங்கள் கிடைப்பதற்கு அரிதாக இருக்கிறபோது புதியதாக ஒரு தொழிற் சாலை ஆரம்பிக்க வேண்டிய அவசியமில்லை.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் மிகச் சிறந்த பிரபலமாக விளங்குகிற சுற்று லாத் தலமான குற்றாலத்தில் ஒரு மிருக காட்சிச் சாலை அமைக்க தமிழக அரசு முன் வருமா? ஏற்கனவே குற்றாலம் டவுன்ஷிப்பில் ஒரு சிறிய மிருக காட்சிச் சாலை இயங்கி கொண் டிருக்கிறது. அதை விரிவுபடுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கையெடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர் களே, அதைப் பார்வையிடச் செய்து, அறிக்கை பெற்ற பிறகு அதுபற்றி யோசிக்கலாம்.

திரு. எச். ஜீ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி இருக்கிறது. அங்கே சுற்றுலா துறை மூலமாகவும், தனியாகவும் பலதரப் பட்ட மக்கள் வந்து செல்கிறார்கள். அங்கே ஒரு மிருகக் காட்சிசாலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இருந்தும் அங்கே எந்தவிதமான மிருகமும் இல்லை. ஆகவே அதை விரிவுபடுத்துவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இதுபற்றித் தனியாக கேள்வி கேட்டால் பதில் சொல்ல இயலும்.

ஜெயங்கொண்டம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைத்தல்.

163—(*வினா எண் 9949)—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சூனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. அறிவிப்புகள்.

(அ) உறுப்பினர் திரு. ரா. சின்னச்சாமி கைது செய்யப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு தர்மபுரி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களிட மிருந்து 23–11–1986–ம் தேதியன்று கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றது:

" I have the honour to inform you that on 23rd November 1986 at 11.35 Hours, Thiru R. Chinnasamy, M.L.A., (D.M.K.) of Dharmapuri Assembly Constituency and 49 others assembled at the Bus Stand, Dharmapuri, as a protest against alleged imposition of Hindi, defying regulatory order under Section 30 (2) Police Act in force. After a brief address, they burnt the 17th Part of the (relevant portion of Official Languages) Constitution of India and caused insult to the honour of